# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 11 புதன்கிழமை 27.08.2025 கதிர் 290


## இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவிற்கு நேற்றுப் பிணை கிடைத்துவிட்டது. அவர் விளக்கமறியலிக்கு அனுப்பப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சிகள் தங்களால் முடிந்தளவிற்கு ☞ 2

## "மலையகத் தமிழ் மக்கள்" என்பது மரியாதைக்குரியதான அங்கீகாரம்

### இப்படிச் சொல்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர்

மலையக மக்களை 'மலையக தமிழ் மக்கள்' என அரசியல் ரீதியாக அங்கீகரிப்பது, அந்த சமூகத்திற்கு ஒரு மரியாதை, அங்கீகாரம் மற்றும் பெருமையைக் கொடுக்கும் செயலாகும். அதற்கான நடவடிக்கைகள் இனியும் தாமதப்படுத்தப்படமாட்டாது என உறுதியளிப்பதாக அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவையான சட்ட சீர்திருத்தங்களை ஆளும்தரப்பு முறையாக மேற்கொண்டு வருவதாக அமைச்சர் சமூக ஊடகங்களில் வெளியிட்ட தகவலில் குறிப்பிட்டுள்ளார். "ஆளும்தரப்பு என்ற ரீதியில் இந்தக் குறுகிய காலத்திற்குள், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான எங்கள் பொறுப்புடன் ☞ 6

## இலங்கைப் படைகளை உலகில் சிறந்ததாக்க நிதி ஒதுக்குங்கள்

### அரசுத் தலைவர் உத்தரவு

இலங்கை பாதுகாப்புப் படை உலகில் தலைசிறந்த தொழில்முறை பாதுகாப்புப் படைகளில் ஒன்றாக மாறவேண்டும். அதற்குத் தேவையான பயிற்சி மற்றும் வசதிகளுக்குத் தேவையான நிதியை முறையாக ஒதுக்குமாறு அரசுத் தலைவர் அநுரகுமார அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரசுத்தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் 2026 வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் பங்கேற்றபோது அரசுத் தலைவர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பாதுகாப்பு அமைச்சிற்கு 2025 ஆம் ☞ 3

# நேற்று மட்டும் செம்மணியில் 16 எலும்புத் தொகுதிகள் மீட்பு

### மொத்த எண்ணிக்கை 166 ஆகியது







செம்மணி மனிதப் புதைகுழியில் தற்போது தோண்டப்பட்டுவரும் சிந்துப்பாத்தி இந்துமயானத்தில் நேற்று மட்டும் 16 எலும்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த அகழ்வுப் பணிகள் திங்கட்கிழமை மீண்டும் தொடங்கப்பட்டன. இரண்டாம் ☞ 2

## மக்கள் பிரதிநிதிகளின்றி மாகாண சபைகள் இயங்குவது ஜனநாயகப் பொருத்தப்பாடல்ல

### தேர்தல்கள் ஆணையாளர் இடித்துரைப்பு

மக்கள்பிரதிநிதிகள் இல்லாமல் அரசஅதிகாரிகள் ஊடாக மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுவது ஜனநாயகத்தக்கு பொருத்தமானதாக அமையாது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் முறைமை தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் நான்காண்டுக்கான தேர்தல் மூலோபாயத் திட்டங்களை வகுக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். மாகாண சபைகளை மறக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அரச அதிகாரிகள் ஊடாக மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுகிறது. இது ஜனநாயகத்தக்கு பொறுத்தமானதாக அமையாது.

தேர்தலை நடத்துவதாயின் அதற்குரிய சட்டம் அவசியம். ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் இல்லாமல் தேர்தலை நடத்தும் இயலுமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடையாது. சட்டமியற்றும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு கிடையாது. ஆகவே எமது விருப்பத்திலான சட்டத்துக்கு அமையத் தேர்தலை நடத்த முடியாது. சட்டவாக்க துறையால் இயற்றப்படும் சட்டத்துக்கு அமைவாகவே தேர்தலை நடத்த முடியும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவற்கு உறுதியானமற்றும் நிச்சயிக்கப்பட்ட சட்டமேதும் தற்போது கிடையாது. தேர்தலை விரைவாக நடத்துவதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் சகல செயற்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

மாகாண சபைகளின் நிர்வாகத்தின்போது மக்கள் பிரதிநிதிகள் அல்லாமல், அரச அதிகாரிகளால் தீர்மானங்கள் எடுக்கப்படுவதுஎந்தளவுக்குசாத்தியமாகும் என்பது பிரச்சினைக்குரியதாக உள்ளது. ஆகவே மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த ஆளும்தரப்பு உரிய தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் ஊடாக எடுக்க வேண்டும் என்றார்.

## ரணிலை ஒருயொரு முறை கைது செய்தால் அநுரவைப் 10 முறை கைது செய்ய முடியும்

### அவ்வளவு பொதுப் பணத்தைச் செலவிட்டார் என கணக்குக்காட்ட முடியும் என்கிறார் சம்பிக்க ரணவக்க

அரசுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தனது பதவி காலத்தில் தேர்தல்களுக்கான பரப்புரை முன்னெடுத்துள்ளார். இதன்போது அவர் செலவிட்ட பணம், பாதுகாப்பு செலவுகள் அனைத்தையும் பொது சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கருத முடியும். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு முறை கைது செய்தால், அநுரவை பத்து முறை கைது செய்ய முடியும் என முன்னாள் அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

கோட்டை-நீதவான் நீதிமன்ற வளாகத்தில் ரணிலுக்கு ஆதரவாக நடந்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த அவர் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அராஜக பாதையை நோக்கி நாடு பயணித்துக் கொண்டிருக்கிறது. 70 ஆண்டுகளாக நாட்டில் காணப்பட்ட ஜனநாயக சுதந்திரமும் பல கட்சி ஆட்சி முறைமையும் இல்லாதொழிக்கப்பட்டு தனிகட்சி ஆட்சியை நோக்கி நாட்டைக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

இது நிர்வாக பிரச்சினையாகும். அவ்வாறிருக்கையில் இதில் ☞ 2 புலனாய்வுத்துறை தலையிட்டு

## சுயாதீனமான நீதித்துறையால் சட்ட ஆட்சி உறுதிப்பட்டதாம்

### சஜித்தின் கருத்து

அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம் என்றும், அழுத்தங்களால் பின்னோக்கிச் செல்ல வேண்டாம் என்றும் நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். சட்டத்தின் ஆட்சி சுயாதீன நீதித்துறையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவித்தார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதிமன்றம் பிணை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது நாட்டில் அரசமைப்புச் சார்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும். சுயாதீன நீதித்துறையால் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. பக்கசார்பின்றி வெளிப்படை தன்மையுடன் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பமாகும்.

நீதிமன்றம் தொடர்ந்தும் இந்தக் கொள்கையில் நிலைத்திருக்கும் என்று நம்புகின்றோம். நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்க முன்னரே தீர்ப்பு தொடர்பில் பல்வேறு விடயங்கள் சமூக ☞ 2

## ரணிலின் கைது தொடர்பில் மக்களிடம் எழுந்துள்ள சந்தேகம் களையப்படட்டும்

### நீதியான சமூகத்திற்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் மத்தியிலும், அரசியல் கட்டமைப்பிலும் எழுந்துள்ள சந்தேகத்தை கருத்திற் கொள்ள வேண்டும். அவை களையப்படவேண்டும். சிறந்த அரசநிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்கு சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் அரச தலைவருக்கு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உரத்துக் கத்திப் பார்க்கின்றன. மக்களிடம் ஆளும்தரப்புக்கு எதிரான எழுச்சியை ஏற்படுத்தப்பார்க்கின்றன. ஆனால், உண்மை என்னவென்றால் ரணில் சிறையில் ஒரு இரவுகூட இருக்கவில்லை என்பதே.

வெலிக்கடைச் சிறைக்குக் கொண்ட சென்ற உடனேயே அவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு அவர் சிறை மருத்துவமைனயில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். ஆக மொத்த்தில் அவருக்கு ஓய்வும் நல்ல மருத்துவக் கண்காணிப்பும் சிகிச்சையும் அரசு செலவில் வழங்கப்பட்டனவே தவிர சிறைவாசம் அல்ல.

ரணில் நீதிமன்றத்தில் நீண்ட நேரம் காத்திருந்ததால் அவருக்கு -நீரிழப்பு ஏற்பட்டது, அவரது உடலில் சோடியத்தின் அளவு குறைந்தது அதனால்தான் அவரை மருத்துவமனையில் சேர்க்கவேண்டிய வந்தது என்று முதலில் மருத்துவ அறிக்கைகளில் தெரிவித்தார்கள். ஆனால் நேற்று நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் அவரது இதயத்திற்குச் செல்லும் நான்கு இரத்தக்குழாய்களில் மூன்றில் அடைப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டது. இதயத் திசுக்களில் இறப்பு இருப்பதும் இதனால் இதயம் மீளமுடியாத சேதத்திற்கு உள்ளாக்கியிருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல முன்னாள் அரசுத் தலைவர் நுரையீரல் நோயால்வேறு அவதிப்படுகின்றார். அவர் தூங்கும்போது சுவாசிப்பதற்கு சிரமத்தை எதிர்கொள்கிறார், அவரது சுவாசத்தைச் சீராக்குவதற்குக் கருவியைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது, அவரது மனைவிக்கே அதனை இயக்கத் தெரியும். அவருக்கு நாட்பட்ட சிறீநிரக நோயும் உள்ளது. என்றெல்லாம்கூட நேற்றைய மருத்துவ அறிக்கையில் கூ-றப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் எடுத்துதான் நீதிமன்றம் நேற்று அவருக்குப் பிணை வழங்கியது.

இந்தநோய்கள்எல்லாம்வழக்குத்தினமான கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ரணில் காத்திருந்ததால் அவருக்கு வந்ததல்ல. அல்லது அவரைச்சிறையில் அடைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் வந்ததல்ல. இவையெல்லாம் அவருக்கு ஏற்கனவே இருக்கும் நோய்கள். இரத்தக் குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புக்களுக்குச் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள அவருக்கு விருப்பம் இல்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ரணிலுக்கு நீதிமன்றம், விளக்கமறியல் என்பவற்றால் ஏற்பட்ட உடனடி உடல்நலக் குறைவுகளைவிட அவருக்கு நாட்டபட்ட நோய்களின் தாக்கமே அதிகம் இருப்பதை உணரமுடியும். ஆக, ரணிலின் உடல்நிலை குறித்து மிகச் சிறப்பான பரிசோதனை ஒன்று அரச செலவில் சிறப்புக் கவனிப்புடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ரணிலுக்குக் கிடைத்தது விளக்கமறியல் சிறையல்ல நல்ல ஓய்வும் அருமையான மருத்துவக் கண்காணிப்பும் என்பதையும் எல்லோரும் புரிந்துகொள்ளமுடியும். இதுதான் இலங்கையின் ‘சிஸ்டம்‘. காலம் காலமாகச் சிறைக்குச் செல்லும் அரசியல்வாதிகள் தொடர்பில் பின்பற்றப்படும் ‘சிஸ்டம்‘. இத்தகைய ‘சிஸ்ட் முறையை மாற்றுவோம் என்று வாக்களித்துதான் தற்போதைய என்பிபி ஆளும்தரப்பு ஆட்சியைப் பிடித்தது. ஆனால் அந்த ‘சிஸ்டத்திற்குள்‘ அதனால் ஒரேயொரு இரவிற்குக்கூட ரணிலைச் சிறையில்பிடித்துவைத்திருக்கமுடியவில்லை. அந்தளவிற்கு ‘சிஸ்டம்‘ வலிமைமிக்கது. அதன் வலிமை இப்போது அநுரவிற்கும் என்பிபி ஆளும்தரப்புக்கும் நன்கு புரிந்திருக்கும்.

சிறைக்குச் செல்லும் ஒவ்வொரு கைதிக்கும் இப்படிச் சிறைச்சாலையிலும் அரசு மருத்துவமனைகளிலும் சிறப்புக் கண்காணிப்பும் பரிசோதனைகளும் வழங்கப்பட்டால் ரணில்விக்கிரமசிங்கவைவிட மிகமோசமான உடல்நலக் கோளாறுகளுடன் தண்டனையையும் விளக்கமறியலையும் அனுபவிக்கும் பலரைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், ‘சிஸ்டம்‘ அதற்கு அனுமதிக்காது. என்ன செய்வது அவர்களுக்கு அரசியல்வாதியாகி, நிதித் துஸ்பிரயோகம் செய்து மாட்டும் விதி இருக்கவில்லை என்பதால் சிறையிலேயே வாடவேண்டியதாக இருக்கிறது.

ரணிலுக்குஇருக்கும்நாட்பட்டநோய்களை எல்லாம் காரணம் காட்டினாலும்கூட அடைத்துவைத்தால் மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிடுவார் என்றும் அவரது சட்டவாதிகள் வாதிட்டார்கள்.

‘தூக்கத்தின்போது சுவாசிப்பதில் சிரமங்களை அனுபவிக்கிறார். இதன் காரணமாக, அவர் தூங்கும் போது ஒரு ஸீஊபூஊ இயந்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். அவரது மனைவிக்கு மட்டுமே இயக்கத் தெரிந்த ஒரு சாதனம் அது. இயந்திரம் செயலிழந்தால் அல்லது கிடைக்கவில்லை என்றால், அது மாரடைப்புக்கு வழிவகுக்கும். எனது கட்சிக்காரரின் உடலில் ஆபத்தான அளவில் சோடியம் குறைந்துள்ளது, நுரையீரல் தொற்று மற்றும் அவரது கணையத்தின் மேல் பகுதியை பாதிக்கும் ஒரு நிலை ஆகியவையும் உள்ளன. இந்தச் சிக்கல்கள் அவரது நோயெதிர்ப்பு மண்டலத்தைக் கடுமையாகப் பலவீனப்படுத்தியுள்ளன, இதனால் அவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த கடுமையான நிலைமைகள் இருந்தபோதிலும், அவை அவரது உடல்தோற்றத்தில் வெளிப்படையாகத் தெரியவில்லை. சுருக்கமாகச் சொன்னால் எனது கட்சிக்காரர் கற்பனை செய்யக்கூடிய கிட்டத்தட்ட அனைத்து பெரிய நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ளார், ஆனால் அவர் அதை வெளிப்படுத்துவதில்லை’ என்று ரணிலின் சட்டவாதி வாதிட்டார்.

இப்படியெல்லாம் பயமுறுத்தியதற்குப் பிறகும் நீதிமன்றம் ரணிலுக்கு பிணை வழங்காமல் இருக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள் வாசகர்களே!.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நேற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமாக ஒதுக்கப்பட்டிருந்த 45 நாள்களில் 33 நாள்கள் ஏற்கனவே முடிந்துள்ள நிலையில் 34ஆவது நாள் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

ஏற்கனவே பணிகள் முன்னெடுக்கப்பட்ட இரு அகழ்வாய்வுத் தளங்களையும் மேலும் விரிவாக்கி நடத்திய அகழ்வில் புதிதாக 16 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றினை சுத்தம் செய்து முற்றாக அகழ்ந்தெடுத்து பொதி செய்யும் பணிகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நேற்றைய பணிகளின்போது சிறுவர்களுடையது எனச் சந்தேகிப்படும் எலும்புக்கூட்டுத்தொகுதிகளும், ஆடையையொத்த துணிஒன்றும்அடையாளம்காணப்பட்டுள்ளது.

செம்மணியில் இதுவரையில் 43 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளில் 155 எலும்புகூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

## ரணிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப் பதன் ஊடாக அச்சுறுத்தவே முயற்சிக்கின்றனர்.

ஆனால் அந்த அச்சுறுத்தல்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை. இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்கள் எதிர்பார்த்த ஜனநாயக சுதந்திரம் இங்கு கிடைக்கப் போவதில்லை.

எனவே அந்த மக்களையும் ஜனநாயகத் தைப்பாதுகாப்பதற்காக முன்னிலையாகுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறில்லை எனில் எதிர்காலத்தில் நாட்டு பிரஜைகளுக்கு சுதந்திரமாக நடமாடக் கூடிய சூழல் காணப் படாது. பொது சொத்துக்கள் குறித்த சட்டம் ஜே.ஆர்.ஜயவர்தனவால் நடைமுறைப் படுத்தப்பட்டது.

அந்த சட்டத்தின் கீழ் முதலில் கைது செய்யப்பட்டுசிறையிலடைக்கப்படவேண்டியது பெலவத்த குழுவினராவர். இன்று நாட்டின் மொத்த கடன் சுமையில் 5 மடக்கு அழிவு அவர்களாலேயே ஏற்படுத்தப்பட்டது.

சமூகத்திலும் பொருளாதாரத்திலும் பேரழிவைஏற்படுத்தியஅவர்கள்முதலில்கைது செய்யப்படவேண்டும். ஜனநாயகத்துக்காகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். கள்வர்களை கைது செய்வதற்கு அஞ்சி நாம் ஒன்றிணைந்துள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

ஆனால் அவ்வாறல்ல. கள்வர்கள் கைது செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த அரசாங்கத்துக்கு அதற்கான தகுதி இல்லை. இவர்களால் அதை செய்யவும் முடியாது. இவர்களால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கு எதிராக 1994களில் ரணில் விக்கிரமசிங்க போன்றோர் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனால் தான் இன்று இவர்கள் இவ்வாறு தலைதூக்கியிருக்கின்றனர். 1980களிலிருந்து வடக்கு உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் அழிவை ஏற்படுத்திய இவர்களுக்கு எதிராக பொது சொத்துக்கள் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அரசுத் தலைவர் அநுரகுமார தனது பதவி காலத்தில் தேர்தல்களுக்கான பரப்புரை முன்னெடுத்துள்ளார். தேர்தல் பரப்புரை என்பது அவரது தனிப்பட்ட விடயமாகும்.

தேர்தல் காலத்தில் அவரால் தேர்தலுக்காகச் செலவிடப்பட்ட பணம், பாதுகாப்பு செலவுகள் அனைத்தும் பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியமையாகும்.

அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க ஒரு முறை கைது செய்யப்படுவாரானால், அநுரகுமார 10 முறை கைது செய்ய முடியும் என்றார்.

## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒவ்வொரு துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் இலங்கை இராணுவம், விமானப்படை, கடற்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கெடெட் அதிகாரிகளுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

பாதுகாப்புப் படை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுப் பயிற்சி குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இந்த பயிற்சி ஏனைய அரச துறைகளிலுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பயிற்சியை விட தனித்துவமானது என்பதால் அது குறித்து அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அரசுத் தலைவர் அறிவுறுத்தினார்.

போரின் போது உயிரிழந்த சிவில் பாதுகாப்புப்படையினரின் குடும்பத்தினருக்கும், ஏனைய பாதுகாப்புப் படையினரின் குடும்பத் தினருக்கும் இழப்பீடு வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அரசுத் தலைவர் அறிவுறுத்தினார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு ஆளும்தரப்பு ஏற்கனவே பெருமளவு நிதியை செலவிட்டு வரும் நிலையில் , அதனால் வழங்கப்படும் சேவைகள் பொதுமக்களுக்கு மிகவும் செயற்திறனுள்ளதாகவும் திறம்படவும் வழங்கப்பட வேண்டும் என்றும் அரசுத் தலைவர் அறிவுறுத்தினார்.

பாதுகாப்பு அமைச்சு தொடர்பான நிர்மாணப்பணிகள், பாதுகாப்புப்படையினரின் நலன்புரி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, அரசுத் தலைவர்யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எச்.எஸ். சம்பத் துய்யகொந்தா, அரசுத் தலைவர்யின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான ரஸல் அபொன்சு மற்றும் கபிலஜனகபண்டார, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள் குழுவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை விலக்களிக்கக்கூடாது என்பதை ஏற்கிறோம். அதேநேரம் நாட்டின் நன்மைக் காக அரசியல் கலாசாரத்தை முதலில் உறுதிப் படுத்தவேண்டும் என்பதை நீதியான சமூகத் துக்கான தேசிய இயக்கம் வலியுறுத்துகின்றது.

நிறைவேற்றுஅதிகாரமிக்கஅரசுத்தலைவர் முறைமை முழுமையாக இரத்துச் செய்யப்பட வேண்டும். அப்போது தான் நியாயமான சமூகத்தை கட்டியெழுப்ப ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

நிறைவேற்றுஅதிகாரமிக்கஅரசுத்தலைவர் முறைமை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து கொண்டு நல்லாட்சி ஆளும்தரப்பு காலத்தில் வெளிப்படையான நடவடிக்கைகளை மேற் கொண்டோம். இதற்கமைவாகவே அரசமைப் பின் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்டது. அரசுத்தலை வரின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அவர் கைது செய்யபட்டார். இவரை கைது செய்யும்போது நபர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் செயற்பட்ட விதம் தொடர்பில் பெரும் சந்தேகம் எழுந்துள்ளமை அவதானத்துக்குரியது.

யூடியூபரான சுதத திலகசிறி என்பவர் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விசாரணைக்கு முன்னி லையாகுவதற்கு முன்னதாகவே அவர் கைது செய்யப்படுவார். விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்று உறுதியாக குறிப்பிட்டிருந்தார். இதன் பின்னரே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுகிறார். ஆகவே இது திட்டமிட்ட அரசியல் செயற்பாடு என்று தோண்றுகிறது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்படும்போது ஊழல் எதிர்ப்பு சட்டத்தை மறந்து அதற்கு பதிலாக தண்டனைச் சட்டக் கோவையின் 386 மற்றும் 388 உறுப்புரை மற்றும் 1982 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பொதுசொத்துசட்டத்தை பயன்படுத்தியுள்ளமை பிணை வழங்க முடியாத நிலைமையை ஏற்படுத்துவதற்காகவா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனக்கான சட்ட உரிமை பெறலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுப் பதை தடுப்பதற்காகவே அவர் வெள்ளிக்கிழ மையன்று விசாரணைக்கு அழைக்கப்பட் டிருந்தால் அதுவும் முறையற்றதொரு செயற்பாடாகும்.

நாட்டின் தலைவர் உட்பட சகல பிரஜைகளும் சட்டத்தின் முன் சமமாக மதிக்கப்பட வேண்டும். சட்டத்தின் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியமாகும். அதற்கு மாற்றுக்கருத்து ஏதும் கிடையாது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் மத்தியிலும், அரசியல் கட்டமைப்பிலும் எழுந்துள்ள சந்தேகத்தை கருத்திற் கொள்ள வேண்டும். சிறந்த அரச நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்கு சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டும்’ என்றுள்ளது.

## சுயாதீனமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலைத்தளங்களில் தெரிவிக்கப்பட்டன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சட்டத்தின் ஆட்சி சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. எவ்வாறிருப்பினும் தற்போது அந்த முயற்சிகள் சுயாதீன நீதிமன்றத்தால் முறியடிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்காக முன்னிலையான சட்டத்தரணிகள், அவரது விடுதலைக்காக ஒன்று திரண்ட ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி உள்ளிட்ட வெவ்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம் என்றும், அழுத்தங்களால் பின்னோக்கிச் செல்ல வேண்டாம் என்றும் நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். சட்டத்தின் மூலம் உங்களின் சுதந்திரம், உரிமை பாதுகாக்கப்படும் என நம்புகின்றோம். யாருக்கும் எதற்காகவும் மக்களை அச்சுறுத்த முடியாது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# புதைகுழிகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களே நீதி வேண்டும் என போராடுவது மக்களின் சாபக்கேடு

## ஓக. 29 கையெழுத்துப் போராட்டம் குறித்து மணிவண்ணன் கருத்து

வடக்கு கிழக்கில் இருக்கும் புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்களேஇன்றுதமிழ்தேசிய பரப்பின் உரித்தாளர்கள் எனக் கூறி கூட்டமைத்து போராடுகின்றனர். இது தமிழ் மக்களின் சாபக்கேடு என தமிழ் மக்கள் கூட்டணியின் மணிவண்ணன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றிற்கூடாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விசாரணை நடத்தவேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒகஸ்ட் 29 நடத்தவுள்ள கையெழுத்துப் போராட்டம் குறித்து நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்திற்குத் தமது கட்சியிடம் ஆதரவு கோரப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அப்படி ஆதரவு கோரப்பட்டால், இப்போது போராட்டம் நடத்துபவர்களுக்கு எதிராகவே அந்த விசாரணைகள் திரும்பினாலும் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் அதனைப் பரிசீலிப்பதற்கும் தாம் தயார் என்றும் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக்கையெழுத்துப் போராட்டம் குறித்துதமிழ் மக்கள் கூட்டணிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிப்பவர்கள் என்று கூறும் கட்சிகளின் நிலைப்பாட்டுக்கு எமது நிலைப்பாடு ஒத்துவராதென நினைத்து அவர்கள் எம்மை அழைக்கால் இருந்திருக்கலாம். அவர்கள் கூட்டு என்ற போர்வையில் எதை சாதிக்க முயல்கின்றார்கள் எனத் தெரியவில்லை.



இந்தக் கூட்டுக்குள் உள்ள பல கட்சிகளின் பிரதிநிதிகள் கடந்த காலங்களில் இராணுவத்துடன் இணைந்து ஒட்டுக்குழுவாக பல்வேறு மோசமான செயற்பாடுகளை செய்தவர்கள் என்பதை மக்கள் அறிவர். அவர்களில் சிலர் செம்மணி உள்ளிட்ட பல கொலைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டி வரும் வாய்ப்பும் உருவாகலாம். எனவே இவர்கள் முன்னெடுக்கும் இந்தப் போராட்டம் எந்தளவு வெளிப்படையானதாகவும்உணர்வுபூர்வமானதாகவும் இருக்கும் என்பது தெரியாது.

இதேவேளை குறித்த போராட்டத்தை முன்னெடுக்கும்தலைவர்கள்உண்மையானவர்களாக இல்லாது போனாலும் போராட்டம் அவசியமானது. அந்தவகையில் போராட்டத்தின் வலுவாக்கலுக்கு எமது கட்சியின் ஆதரவு என்றும் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி



JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமிலச் சோதனைக் காலம்

**இலங்கையின் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பது நாட்டின் அரசியல் மற்றும் நீதித்துறை வரலாற்றில் ஒரு புதிய கட்டத்தைத் திறக்கிறது. ஒரு செயற்பாட்டுத் தலைவர் அல்லது முன்னாள் தலைவர் சட்டத்தின் முன் நிற்க வேண்டிய சூழ்நிலை இலங்கையில் இதுவரை அரிதாகவே ஏற்பட்டுள்ளது. எனவே, அவரை கைது செய்த சம்பவமும் அதன்பின் பிணையில் விடுதலை செய்த சம்பவமும் மக்கள் மத்தியில் பல்வேறு விவாதங்களை ஏற்படுத்தியுள்ளன.**

**முன்னாள் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவ்வளவு வலிமையானவை, எவ்வளவு நீதிசார்ந்தவை என்ற கேள்வி இயல்பாகவே எழுப்பப்படுகிறது. ஒரு அரசுத் தலைவர் பதவியில் இருக்கும்போது மேற்கொள்ளும் செயல்கள் அரசுப் பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு ஆகியவற்றின் எல்லையைப் பிரித்தறிவது சிக்கலானது. அதனால், இத்தகைய வழக்குகள் நீதிமன்றத்தில் நிலையான ஆதாரங்களோடு நிரூபிக்கப்பட வேண்டியது அவசியம். இல்லையெனில், இது அரசியல் பழிவாங்கலாகவே கட்டமைக்கப்படும் அபாயம் உண்டு.**

**இந்த நிலையில், நீதிமன்றம் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்கியிருப்பது அவரது குற்றமோ, குற்றமற்றதோ என்று தீர்மானிப்பதல்ல. மாறாக, சட்ட நடைமுறையில் குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றமற்றவர் என்ற அடிப்படைச் சட்டக் கோட்பாட்டை வலியுறுத்துவதாகும்.**

**இச்சம்பவம் அரசியல் ரீதியாக பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. தேசிய மக்கள் சக்தி (NPP) ஆட்சி, கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய 'அமைப்பு மாற்றத்திற்கான மக்களாணையை' முன்னிலைப்படுத்தி செயல்படுவதாகக் கூறி வருகிறது. ஆனால், முன்னாள் தலைவரை கைது செய்ததும், பிணையில் விடுவிக்கப்பட்டதும், அது அமைப்பு மாற்றமா அல்லது அரசியல் பழிவாங்கலா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.**

**ஆளும்தரப்பு கடந்த மூன்று மாதங்களாக தங்களது சொந்த அமைச்சர்களுக்கு எதிராக எழுந்த ஊழல் மற்றும் அதிகார முறைகேட்டுக் குற்றச்சாட்டுகளை பெரும்பாலும் புறக்கணித்து வந்துள்ளது. அதேசமயம், எதிர்க்கட்சித் தலைவர்களை எதிர்த்து மட்டுமே சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது 'தேர்வு செய்யப்பட்ட நீதி' எனக் கருதப்படுகிறது. இது மக்கள் நம்பிக்கையைக் குலைக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.**

**இந்தச் சம்பவம் எதிர்க்கட்சிக்கு ஒரு புதிய உயிர் ஊட்டியிருக்கிறது. பல ஆண்டுகளாக சீரற்ற நிலையில் இருந்த எதிர்க்கட்சி, இப்போது அரசு மீது தாக்குதல் நடத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. எனினும், இந்தச் சூழலை அவர்கள் ஜனநாயகப் பொறுப்புடன் பயன்படுத்துகிறார்களா அல்லது வெறும் அரசியல் களவாணித்தனமாக மாற்றுகிறார்களா என்பதே கவனிக்கத்தக்கது.**

**ஒரு வலுவான எதிர்க்கட்சியே ஜனநாயகத்தின் உயிராகும். எனவே, விக்கிரமசிங்க விடுதலையைத் தங்கள் அரசியல் ஆயுதமாகக் கொண்டு, அரசு செயல்பாடுகளை உண்மையாகக் கண்காணிக்கின்ற நிலையை நோக்கிச் செல்ல வேண்டியது அவசியம்.**

**சர்வதேச சமூகம், குறிப்பாக ஜனநாயக மதிப்புகளை வலியுறுத்தும் நாடுகள், இச்சம்பவத்தை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. முன்னாள் தலைவரை கைது செய்ததும், பின்னர் பிணையில் விடுவித்ததும், இலங்கையின் சட்ட ஆட்சி உண்மையிலேயே இயங்குகிறதா என்ற கேள்வியை உலக மேடையில் எழுப்பியுள்ளது.**

**மக்கள் கடந்த தேர்தலில் வாக்களித்தது அரசியல் பழிவாங்கலுக்காக அல்ல, அமைப்பு மாற்றத்திற்காகத்தான். அவர்கள் எதிர்பார்த்தது ஊழலை கட்டுப்படுத்தும் ஆட்சியும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உறுதியும், வெளிப்படையான நிர்வாகமும்தான்.**

**எனவே, ஆளும்தரப்பு விக்கிரமசிங்க விவகாரத்தைப் பயன்படுத்தி தங்களது ஆதரவாளர்களை மகிழ்விக்க முயன்றால், அது எதிர்மாறாகவே இயங்கும். ஆளும்தரப்புத் தனது சொந்த அமைச்சர்களையும், ஆதரவாளர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தத் தயங்காமல் செயல்படும்போது மட்டுமே மக்கள் நம்பிக்கை மீண்டும் வலுப்பெறும்.**

**ரணில் விக்கிரமசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பது ஒரு சட்ட நடைமுறை. ஆனால் அது ஓர் அரசியல் சோதனையாகவும் மாறியுள்ளது. இலங்கையின் நீதித்துறை எவ்வளவு சுயாதீனமாய் உள்ளது, ஆளும்தரப்பு எவ்வளவு வெளிப்படையான நோக்கத்தோடு செயல்படுகிறது, எதிர்க்கட்சிகள் எவ்வளவு பொறுப்புடன் செயற்படுகின்றன என்பதற்கான அமிலச் சோதனையாகவே இது அமைகிறது.**

# மண்டைதீவுப் படுகொலைகளின் 35 ஆவது நினைவேந்தல் நேற்று





மண்டைதீவுப் படுகொலைகளின் 35ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

35வருடங்களுக்கு முன்னர் இதே தினத்தன்று இராணுவத்தால் மண்டைதீவில் நடத்தப்பட்ட படுகொலைகளின் நினைவிடத்தில் ஒன்றுகூடிய மக்கள் பலர் தமது உறவுகளை நினைவுகூர்ந்து சுடரேற்றி மலர் தூவி அஞ்சலித்தனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களில் இருவரின் உறவினர்கள் முதன்மைச் சுடரேற்றி நினைவிடத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலியில் ஈடுபட்டனர். வேலணை பிரதேச சபையின் தவிசாளர் அசோக்குமர் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தி அஞ்சலிசெலுத்தினர்.

26.08.1990 ஆம் ஆண்டு தீவக பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் இளம் பெண்களும் கொல்லப்படும் காணாமலாக்கப்பட்டும் இருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உடலங்கள் மண்டைதீவு2ஆம்வட்டாரப்பகுதியில்குறிப்பிட்ட சில கிணறுகளில் இருப்பதாகவும் அதற்கான வாழும் சாட்சியங்கள் இருப்பதாகவும் பல்வேறு தரப்பினரும் கூறிவரும் நிலையில், அத்தகைய கிணறுகளில் ஒன்றின் முன்பாகவே நேற்றைய தினம் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்தப்படுகொலைகளில்தனது கணவனையும் சகோதரனையும் இழந்த பெண், தனது கணவரும் சகோதரனும் இராணுவத்தினரால் தனது கண் முன்னே கைது செய்யப்பட்டனர், எனது உறவினர் ஒருவரது வீடின் பின் பகுதியில் வைத்து கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர், அதன் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கோர சம்பவத்துக்கு நான் கண்கண்ட சாட்சி என்று தெரிவித்தார்.

அத்துடன் எனது சகோதரனின் மனைவியையும் இன்னொரு இளம் பெண்ணையும் கைதுசெய்து ஒரு வீட்டுக்குள் கொண்டு சென்ற படையினர் அவர்கள் இருவரையும் பாலியல் பலாத்காரம் செய்து சீரழித்ததுடன் உள்ளாடைகளைக் கூடக் கையில் கொடுத்து அனுப்பிய கொடுமையையும் நான் நேரில் கண்டு அனுபவித்தேன்.

தாங்கள் கொலை செய்த பலரது உடல்களை ஊர் மக்களைக் கொண்டு சேகரித்து கிணறுகளில் போட்டுமூடினர். அப்படிப்பட்ட ஒரு கிணறுதான் இதுவும். இந்தக் கிணறு போன்று இன்னும் சில இருக்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 400 வருடங்கள் வழமை வாய்ந்த ஆதி சிவனுக்கு திருக்குடமுழுக்கு

400 வருடங்களுக்கு மேல் பழைமையான துணவி பிரகேஷ்வரன் ஆதி சிவனுக்கு ஓகஸ்ட் 29 வெள்ளிக்கிழமை திருக்குடமுழுக்கு நடக்கவுள்ளது.

தமிழ் தொல்லியல் மற்றும் பாரம்பரியச் செல்வங்களைப் பாதுகாப்பதையும், அவற்றை வருங்கால சந்ததியினருக்குக் கொண்டு சேர்ப்பதையும் நோக்கமாகக் கொண்ட யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் 3ஆவது செயற்றிட்டம் வட்டுக் கோட்டை துணவி கிராமத்தில் வயலும் வயல் சார்ந்த மருத நில பரப்பில் அமைந்துள்ள இந்த ஆலயத்திலேயே இடம்பெற்று வருகின்றது.

மனித செயற்பாடுகளால் சிதைவடைந்த நிலையில் பழைமை மாறாத வகையில் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வரும் இந்த ஆலயத்தில் ஓகஸ்ட் 29 வெள்ளிக்கிழமை காலை 9.20 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் திருக்கடமுழுக்கு நடைபெறவுள்ளது.

இன்றுகாலைகர்மாரம்பம். விக்னேஸ்வரபூசை, புண்ணியாவாசனம். அனுக்ஞை. விநாயக. நவக்கிரக வழிபாடு மாலை வாஸ்து சாந்தி. நுஉதன மூர்த்திகள் ஸ்தாபனம். அஸ்டபந்தனம் ஆகியனவும் நாளை வியாழக்கிழமை காலை யாகபூசை. தைலாப்பியாசம், பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் மாலை யாகபூசை, விம்பகத்தி தத்துவநியாசம் ஐயர்சாருதி என்பனவும் இடம்பெறும்.

திருக்குடமுழுக்கு அன்று மதியம் அன்னதானமும் இடம்பெறும்.

# காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடிக்கொண்டே இருக்கின்றோம்

## அம்பாறை மாவட்டத் தலைவர் செல்வராணி தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

காணாமலாக்கப்பட்ட உறவுகளை நாம் தொடர்ந்தும் தேடிக்கொண்டேதான் இருக்கின்றோம் என்று அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி செல்வராணி தெரிவித்தார்.

கல்முனையில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு அரசியலில் ஈடுபாடில்லை. ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட விடயமானது எங்களுக்கு அப்பாற்பட்ட விடயம்.

எங்களது உறவுகளையும் உயிர்களையும் இன்று தொலைத்தவர்களை நாங்கள் வீதிகளிலும் பல இடங்களிலும் தேடுகிறோம். எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது அதற்கான உண்மை




தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். அதன் பிற்பாடுகள் தான் ஏனைய விடயங்களில் நாங்கள் பரிசீலனை செய்வோம் என்றார்.

# கருணா அம்மான் மீது சட்ட நடவடிக்கை எடுங்கள்

## மனித உரிமை செயற்பாட்டாளர் வலியுறுத்து

(பாறுக் ஷிஹான்)

கருணா அம்மான் மீது சட்ட நடவடிக்கை எடுங்கள். விசேடமாக பிள்ளையான இனிய பாரதி குழுக்களுடன் இயங்கியவர்கள் கல்முனை பகுதியில் தற்போது சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தொடர்பான சாட்சியங்களையும் குற்றப் புலனாய்வு பிரிவு பதிவு செய்ய வேண்டும் என மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீவன் தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசோடு ஒட்டுக் குழுக்களாக ச்செயற்பட்ட நிலையில் அண்மையில் கைது செய்யப்பட்ட கருணா குழுவை சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இணைப்பாளராகவும் மாகாண சபை உறுப்பினராக இருந்த இனிய பாரதியும் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

இவர்களுடைய கைதை தொடர்ந்து பல கைதுகள் தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் கடந்த காலங்களில் பல வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்களாக நேரடியான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் அவர்களுடைய தலைமை ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டவர் கருணா அம்மான் அவர்கள்.அவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாக குற்றச்சாற்றப்படவில்லை என்ற போதிலும் அவ்வாறு இருந்திருந்தால் அல்லது அக்காலத்தில் குறித்த குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருக்கும் ஆனால் அவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

விசேடமாகபிள்ளையானஇனியபாரதிகுழுக்களுடன் இயங்கியவர்கள்இன்றுகூட கல்முனைபகுதியில்தற்போது சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்பான சாட்சியங்களையும் குற்றப்புலனாய்வு பிரிவு பதிவு செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட குறிப்பிட்ட அவர்களையும்விசாரணை வளையத்துக்குள் எடுத்து விசாரணைகளை ஆரம்பிப்பதன் மூலம் பல்வேறு விடயங்கள் வெளியாகும்.எனவே அவர்கள் மிக விரைவில் கைது செய்யப்பட வேண்டும் என தெரிவிக்க விரும்புகிறேன் என்றார்.

# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழுதடைந்த பழங்கள் விற்பனை

## கல்முனையில் திடீர் சோதனை

(பாறுக் ஷிஹான்)

சுகாதாரம் மற்றும் தரமிக்க உணவுப் பொருட்களைப் பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு விற்பனை நிலையங்கள், பழக்கடைகள் என்பவற்றில் திடீர் சோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்றுக் காலை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

சாய்ந்தமருது கடற்கரை வீதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழுதடைந்த ஒரு தொகை பழங்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டன.

குறித்த இடத்தில் பழுதடைந்த பழங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து



கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினையடுத்து,அப்பகுதிக்கு திடீரெனச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பழுதடைந்தபழங்களைக்கைப்பற்றியதுடன்வியாபாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.









# காத்திடு என்று கழலினைப் பணிவார் !

ஆவணிச் சதுர்த்தியில் ஆனை முகவனை
அடியவர் பரவித் தொழுதுமே நிற்பார்
வேண்டிய அனைத்தும் விரைவில் கிட்ட
விநாயகன் திருவடி பரவியே நிற்பார்

தொப்பை அப்பனைத் தொழுது நிற்பார்
தப்பிதம் போக்கிட தாழினைப் பணிவார்
முப்பழம் சர்க்கரை மோதகம் படைப்பார்
கப்பிய கரிமுகன் கழலினைப் பற்றுவார்

மோதகம் பானகம் அவலொடு அப்பம்
யானை முகத்தான் சன்னதி படைப்பார்
பாதகம் போக்கிட பக்குவம் பேணி
பணிந்து கணபதி பாதம் பரவுவார்

நுடங்கா இருக்க வேண்டியே நிற்பார்
அடங்கா ஆணவம் அழித்திட வேண்டுவார்
உண்மைப் பொருளே உமையாள் மைந்தா
உள்ள வழுக்கை துடைத்திடு என்பார்

தொடங்கும் அனைத்தும் துலங்க வைக்கும்
துங்கக் கரிமுகத்துத் தூமணி என்றும்
பங்கம் வராமல் பள்ளத்தில் வீழாமல்
காத்திடு என்று கழலினைப் பணிவார்





மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்

## மலையக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் முன்னேறி வருகிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் விஜித ஹேரத்,"மலையக மக்கள்' பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களில் அதிகாரப்பூர்வமாக 'மலையகத் தமிழ் மக்கள்' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்"என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அவர்கள் நமது நாட்டின் குடிமக்களாக முழுமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும், மேலும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் சொந்த வீடுகள், நிலம், தரமான கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பெறத் தகுதியானவர்கள். இந்த நோக்கத்திற்காகவே ஹட்டன் பிரகடனம் முன்வைக்கப்பட்டது, அது முறையாக செயல்படுத்தப்படவேண்டும்''என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் சுமார் 4200 குடும்பங்களுக்கு சட்டபூர்வமாக வீடுகளை வழங்க ஓகஸ்ட் 3 ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும், ஆனால் ஒரு தொழில்நுட்பத் தடையால் அந்த செயல்முறை தாமதமாகியிருக்கிறது என்றும் அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"இவர்கள் நமது நாட்டில் நீண்டகாலமாக துன்பப்பட்ட மக்கள், வறுமை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வசதிகளை எதிர்கொண்டவர்கள். இந்த யதார்த்தத்தை நாம் பல தசாப்தங்களுக்கு முன்பே ஒப்புக்கொண்டோம். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். எனவே, இதில் மேலும் தாமதங்கள் ஏற்படாது என நாங்கள் உறுதியளிக்கிறோம்" என்று அவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக, பதுளை, நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து மலையக மக்கள் தேசிய மக்கள் சக்தி இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2025இல் வெளியிடப்பெற்றது